# Record of Deposition of Witness

## In the Court of District Munsif Uthangarai Krishnagiri District

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 56 of 2020 | **CNR No.** | **:** | TNKI13-00084-2020 |
| **Name** | **:** | சம்பத் | **Father's Name** | **:** | ராமலிங்கம் |
| **Witness for** | **:** | Plaintiff | **Calling** | **:** | PW1 |
| **Age** | **:** | 40 | **Village** | **:** | கே.பாப்பாரப்பட்டி |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 04.00 PM | **End Time** | **:** | 04.15 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 12.09.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

(1) சர்வே எண். 217/2–ல் என்ன உள்ளது என்றால் எனது பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, மாட்டு கொட்டகை உள்ளதாக சொல்லியுள்ளேன். நான் எனது பிரமாணபத்திரத்தில் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு வழக்கு சொத்துக்கள் எவ்வாறு பாத்தியம் என்று என்னால் சொல்ல இயலாது என்றால் எனது தாத்தாவிற்கு தான் தெரியும். எனது தாத்தா எனக்கு எழுதிக் கொடுத்த பத்திரத்தில் வழக்கு சொத்துக்கள் காலி ஜாகா என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் காலி ஜாகாவும் உள்ளது மாட்டு கொட்டாயும் உள்ளது. நான் சொல்வது போல் உண்மையில் மாட்டுக்கொட்டாய் இருந்திருந்தால் பத்திரத்தில் எழுதியிருப்பார் என்றும் அவ்வாறு இல்லாததால் தான் எழுதவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எனது தாத்தா கட்டிடங்கள்

கட்டியிருந்தால் அளவுகளோடு பத்திரத்தில் குறிப்பிட்டிருப்பார் என்றும் அவ்வாறு கட்டாததால் தான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 217/2 சொத்து 2-ம் பிரதிவாதிக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டுள்ளது எனக்கோ எனது தாத்தாவிற்கோ எந்த பாத்தியமும், சுவாதினமும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. 2-ம் இன சொத்தில் 2-ம் பிரதிவாதி தான் கட்டிடம் கட்டி வாடகைக்கு விட்டு வாடகை பெற்று வருகிறார் என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு எந்த பாத்தியமும் இல்லை என்றும் அதனால் தான் உரிமை மூலம் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. குறுக்கு விசாரணை சாட்சியம் அனைத்தும் முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரணாக உள்ளது என்றால் சரியல்ல. 2-ம் இன சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், அது அரசாங்கத்தால் 2-ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எனது வழக்கிற்கு ஆதரவாக எந்த சான்றாவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் 2-ம் இன சொத்தில் எந்த பாத்தியமும் இல்லை என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. குறுக்கு விசாரணை முடிவுற்றது.

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND

District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: UTHANGARAI

District Munsif
Uthangarai